[1996 ஆகஸ்ட் 7

124—

சிவப்பு விளக்குப் பகுதியிலுள்ள தமிழ்நாட்டுப் பெண்கள்

* *572*—**திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு சமுகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மும்பை சிவப்பு விளக்குப் பகுதியில் சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த இளம் பெண்களை மீட்டுத் தமிழகத்திற்குக் கொண்டுவர அரசு முயலுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மும்பை சிவப்பு விளக்குப் பகுதியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண்கள் சிக்கித் தவிப்பதாக புகார் யாரேனும் கொடுத்தாலோ, அல்லது அதுபோன்ற தகவல் நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து காவல் துறைக்கு கிடைத்தாலோ, மும்பைப் பகுதியில் சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டுப் பெண்களை மீட்டு வர காவல் துறை ஆவன செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செங்கை சிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18.5.1996 அன்று மும்பை சிவப்பு விளக்குப் பகுதியான பாண்டுப், கோனாப்பூர் ஆகிய இடங்களிலிருந்து "சுரக்ஷா" என்ற ஒரு சமூக நிறுவனம் இதுவரை அந்த சிவப்பு விளக்குப் பகுதியிலிருந்து 600-க்கும் மேற்பட்ட பெண்களை மீட்டு இருக்கிறது. அதிலே ஆந்திராவைச் சேர்ந்தவர்களும், குறிப்பாக தமிழகத்தைச் சேர்ந்த 9 பேரும் அதிலிருந்து மீட்கப்பட்டிருக்கிறார்கள். பவானியைச் சேர்ந்த விஜயா என்ற ஒரு பெண் 100-க்கு மேற்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த பெண்கள் இந்த சிவப்பு விளக்குப் பகுதியில் சிக்கித் தவிக்கிறார்கள் என்ற செய்தியை பத்திரிகைகளுக்குச் சொல்லி குறிப்பாக 'தினத்தந்தி' பத்திரிகையில் இந்த செய்தி 27.5.1996 அன்று வெளிவந்திருக்கிறது. எனவே, மும்மை

1996 ஆகஸ்ட் 7]

சிவப்பு விளக்குப் பகுதியிலிருந்து தமிழகப் பெண்களை மீட்க ஒரு தனி போலீஸ் படை அமைத்து அவர்களைத் தமிழகத்திற்கு கொண்டு வந்து புனர் வாழ்வு அளிக்க அரசு முனையுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கலைஞர் ஆட்சி 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற நேரத்தில் இதுபோன்ற ஒரு தகவல் தமிழக அரசுக்கு தரப்பட்டது. அப்போது தமிழக அரசு அதை முன்னின்று அதற்குரிய துறையின் மூலமாக அங்கிருந்த பாதிப்புக்கு உள்ளான தமிழகப் பெண்களை மீட்டு வரச் செய்து, அவர்கள் வேறு தொழில் செய்ய விரும்பிய பட்சத்தில் அவர்களுக்கு நிதி உதவி அளித்திருக்கிறது. எனவே, இப்போது உறுப்பினர் தந்த தகவலை ஏற்றுக்கொண்டு உரிய துறையின் மூலமாக விசாரணை நடத்தி அவர்களை மீட்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து

திரு. சி. வேலாயுதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். நேற்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். இன்று அது வரவில்லை, ஏன் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என் அறையில் வந்து கேட்க வேண்டும்.